REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

## உலகம் முழுவதையும் அடிமை கொள்ள கிரெம்ளின் உத்தேசித்திருக்கிறதாம்

வாஷிங்டன், ஜூன் 17—

"1973-ம் ஆண்டுக்குள் உலகம் முழுவதையும் தன் ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்துவிட வேண்டுமென 'கிரெம்ளின்' திட்டமிட்டிருக்கிறது. இப்போதைய வேகத்தில் கம்யூனிசம் முன்னேறுமானால், தனது இலட்சியத்தை இன்னும் 16 ஆண்டுகளில் அது நிறைவேற்றிக்கொள்ளும்" என்று ஆஸ்திரேலிய கிறித்துவ கம்யூனிஸ்டு எதிர்ப்பு இயக்கத் தலைவர் கருத்தறிவித்திருக்கிறாராம்.

மலர் 5 | சென்னை: ஆனி 3உ திங்கள் (17—6—57) ★ வெளியூர்: ஆனி 4உ செவ்வாய் (18—6—57) [இதழ் 2

# டெல்லிக்கு எதிராக அசாம் போர்க்கோலம்!

## காங்கிரஸ் மந்திரி சபை இராஜிநாமா செய்யும்?

## எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவப் போராட்டம்

## பீகாரில் அமைப்பது என்ற டெல்லியின் முடிவுகண்டு ஆத்திரம்

டில்லி சர்க்காருக்கு எதிராக அசாம் மாநில மக்கள், அந்த மாநிலத்தின் காங்கிரஸ் மந்திரிகளின் தலைமையில் போர்க்கோலம் பூண்டுவருகிறார்கள் என்ற செய்தி ஷில்லாங்கிலிருந்து கிடைத்திருக்கிறது.

அசாம் மாநிலத்தில், ஒரு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலை நிறுவ வேண்டுமென்று மக்கள் கோரிக்கை தெரிவித்திருக்கிறார்கள்; பண்டிதரின் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்; சட்டசபையிலும் இது குறித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனாலும், இதனைக் கவனிக்க மறுத்துவிட்டு, பீகாரில் 'ப்ரௌனி' என்ற இடத்தில் இத்தொழிற்சாலையை நிறுவப் போவதாக டில்லி முடிவு செய்துவிட்டது என்ற செய்தி அசாமில் பெரும் கிளர்ச்சியைத் தூண்டியிருக்கிறது.

மந்திரிசபை, இந்த விவகாரத்தில் இராஜினாமாச் செய்யவேண்டும் என்று காங்கிரஸ் சட்டசபை உறுப்பினர் கூட்டத்தில் கேட்கப்பட்டிருக்கிறது; சில மந்திரிகளும் இந்த நடவடிக்கையை ஆதரிக்கின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவர்களுடன் முதன் மந்திரி கலந்தாலோசித்திருக்கிறார்.

காங்கிரஸ்காரர்கள், 'மந்திரி சபை இராஜினாமாச் செய்ய வேண்டும்' என்றும், 'டில்லிக்கு எதிராகப் போராட வேண்டும்' என்றும் தீவிரமாகப் பேசிவருகின்றனர்.

நடைபெறும் சட்டசபையில் கடந்த ஆண்டு ஏப்ரல் 3-ந் தேதி நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிற 'அசாமில் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையை நிறுவ வேண்டும்' என்ற கோரிக்கையை வற்புறுத்தும் மற்றொரு தீர்மானத்தை நான்கு காங்கிரசார் கொண்டுவந்துள்ளனர்.

அது இன்று (திங்கள்) விவாதிக்கப்படவிருக்கிறது. இதற்கிடையில் மந்திரிகள் அனைவரும் தொடர்ந்து கூடிப் பேசி வருகின்றனர்.

★

## 'அவசர நடவடிக்கை வேண்டாம்'

## 'மந்திரி சபை இராஜிநாமா கூடாது'

### அசாம் காங்கிரசாருக்கு தேபர் உபதேசம்

புதுடில்லி, மே 16—

'மந்திரி சபை இராஜிநாமா போன்ற எந்தவித அவசர நடவடிக்கைகளிலும் ஈடுபட வேண்டாம்' என்று அசாம் காங்கிரஸ் தூதுக் குழுவிற்குக் காங்கிரஸ் தலைவர் தேபர், உபதேசித்திருக்கிறாராம்!

அசாம் எண்ணெயை பீகாரில் சுத்திகரிப்பது என்ற டில்லியின் முடிவு அசாம் மக்களிடை தூண்டியுள்ள ஆத்திரத்தைத் தேபருக்குத் தெரிவிக்க, அசாம் காங்கிரஸ் தலைவர் பிமலா பிரசாத் சலிகா தலைமையில் புதுடில்லிக்கு ஒரு தூதுக் குழு சென்றது.

பண்டிதர் வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்திலிருந்து திரும்பியதும், தான் இது குறித்து பேச முடியும் என்றும் தேபர் தெரிவித்தாராம்.

இந்த விவகாரம் குறித்து விவாதிக்க பிரதேச காங்கிரஸ் செயற்குழுவின் விசேடக் கூட்டம் இந்த வாரம் நடைபெறும் என்றும், பின்னர் பொதுக் குழு கூடி முடிவு செய்யும் என்றும் தெரியவருகிறது.

## மலேயாவில் 20749 பேர் படுகொலை

கோலாலம்பூர், ஜூன் 17—

கடந்த 9 ஆண்டுகளில், பயங்கர ஒழிப்பு நடவடிக்கையின் பெயரால் 20,749 பேர் கொல்லப்பட்டனராம். இவர்களில் 107 பேர் இந்தியக் கம்யூனிஸ்டுகள் என்றும், 226 பேர் இந்திய சிவிலியன்கள் என்றும் கூறப்படுகிறது.

ஆகஸ்டு 31-ந்தேதியன்று மலேயா சுதந்திரம் பெறுகிறது.

கம்யூனிஸ்டுகளை ஒடுக்குவதில் எல்லோரும் அக்கறை காட்ட வேண்டும் என்று முதலமைச்சர் அப்துர் 'ரெஹ்மான் கேட்டுக் கொண்டுள்ளார்.

## மகா குசராத் மாநிலம் கோரி போராட்டம்

### மீண்டும் ஆகஸ்டு திங்களில் துவங்க முடிவு

அகமதாபாத், ஜூன் 17—

மகா குசராத் மாநிலம் பெறுவதற்காக மீண்டும் போராட்டம் நடத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மகா குசராத் ஜனதா பரிஷத் தோன்றிய முதலாண்டு விழா, வரும் ஆகஸ்டு 8-ந் தேதி கொண்டாடப்படவிருக்கிறது என்றும், அன்று, மகா குசராத் கிளர்ச்சி உணர்வைப் புதுப்பிக்கும் நோக்குடன் பிரதேசமெங்கும் பொது வேலை நிறுத்தம் நடத்தப்பட வேண்டும் என்றும் பரிஷத்தின் மத்திய செயற்குழு தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது.

இதுவரை இல்லாத வகையில் அன்று குசராத் முழுவதும் எல்லாப் போக்கு-வரத்துச் சாதனங்களையும் மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் செயற்குழு கேட்டுக்கொண்டிருக்கிறது.

மக்கள் எல்லோரும் தாமாகவே முன்வந்து, அன்று ஒரு நாள் மட்டும் விமானம், மற்றும் சைக்கிள் உள்பட எல்லாப் போக்கு-வரத்து வாகனங்களையும் உபயோகிக்காமல் பகிஷ்கரிக்க வேண்டும் என்று விளக்கம் தரப்பட்டிருக்கிறது.

## பிரெஞ்சு இராணுவத்தின் படுகொலை

### அல்ஜீரிய மக்களைக் கொன்று குவிப்பதில் தீவிரம்

அல்ஜியர்ஸ், ஜூன் 16—

நேற்று முன்தினம் மட்டும் பிரெஞ்சு இராணுவத்தினர் 208 அல்ஜீரிய விடுதலை வீரர்களை வேட்டையாடியதாக பிரெஞ்சு இராணுவ அதிகாரி ஒருவர் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார். இவர்களில் இரு போராட்டத் தலைவர்களும் அடக்கமாம்.

கடந்த 30 மாத காலமாக நடைபெற்றுவரும் அல்ஜீரிய தேசிய விடுதலைக் கிளர்ச்சியை ஒடுக்க பிரெஞ்சு இராணுவம் மேற்கொண்ட மிகப் பயங்கரமான தாக்குதல்களில் இது பிரதானமானது என்று அவர் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்தச் சண்டையின்போது பிரெஞ்சு இராணுவத்தினரில் 13 பேர் கொல்லப்பட்டதாகவும், 42 பேர் காயமுற்றதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

### முன்னர் வந்த செய்திகள்

கடந்த செவ்வாயன்று பிரஞ்சு இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் விளைவாக 61 அல்ஜீரியர்கள் படுகொலை செய்யப்பட்டதுடன் சுமார் 200 பேர் படுகாயமுற்றனர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

ஆனால் இராணுவத்தினரோ, அல்ஜீரிய தேசிய விடுதலை இயக்கத்தினர் 35 அல்ஜீரியர்களைப் படுகொலை செய்துவிட்டதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

## 'தொழில்துறை அபிவிருத்தியில் தென்னாடு பின்தங்கிக் கிடக்கிறது'

### 'ஐந்தாண்டுத் திட்டத்தில் நியாயமான பங்கும் கிடைக்கவில்லை'

### 'திராவிட மாநிலங்கள் ஒன்று சேர்ந்து பாடுபட வேண்டும்'

இந்துஸ்தான் வர்த்தகக் கழகத் தலைவர் கருத்துரை

சென்னை, ஜூன் 15—

இந்துஸ்தான் வர்த்தகக் கழகத் தலைவரான என். டி. படேல், கழகத்தின் 11-வது ஆண்டுவிழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு அநீதி இழைக்கப்பட்டிருக்கிற உண்மையைச் சுட்டிக்காட்டியிருப்பதுடன், 'தென்னாட்டு மாநிலங்கள் நான்கும் சேர்ந்து டெல்லியுடன் போராட வேண்டும்' என்ற யோசனையையும் தெரிவித்திருக்கிறார்.

தென்னாட்டில் தொழில் அபிவிருத்தி பற்றிப் பேசுகையில் அவர் குறிப்பிட்டதாவது:—

"தென்னாட்டின் வளர்ந்து வரும் தேவைகளைக் கணக்கில் கொண்டு பார்த்தால், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமானதல்ல; மிகவும் குறைவானதாகும்.

"தொழில் துறையைப் பொறுத்தமட்டில் தென்னாடு மிகவும் பின்தங்கிய பிரதேசமாகும்; இங்கு வேலையில்லாத் திண்டாட்டம் மிகக் கடுமையாக இருந்துவருகிறது.

"எனவே, சென்னை சர்க்கார் மேலும் அதிகமான தொகை ஒதுக்கித் தருமாறு, டெல்லி சர்க்காரை வற்புறுத்த வேண்டும்.

"நெய்வேலியைத் தவிர வேறெந்தப் பெரிய தொழிலோ, திட்டமோ தென்னாட்டிற்கென உத்தேசிக்கப்படவில்லை.

"எனவே, சென்னை, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய நான்கு தென்னாட்டு மாநிலங்களும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு தென்மண்டலம் உருவாக்கிக் கொண்டு, தென்னாடு முழுவதுமாக தொழில் துறையில் அபிவிருத்தி பெறுவதற்காக முயற்சிக்க வேண்டும்."

## காமன்வெல்த் மாநாடு

### பண்டா செல்லமாட்டாராம்

கொழும்பு, ஜூன் 17—

இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகா இலண்டனில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் பிரதமர்கள் மாநாட்டிற்குப் போகமாட்டார் என்றே கூறப்படுகிறது.

ஜூன் 26-ந் தேதி துவங்கும் அந்த மாநாட்டிற்கு 22-ந் தேதி கொழும்புவிலிருந்து புறப்படுவதாயிருந்த அவர், தனது பிரயாணத்தை நிறுத்திவிட உத்தேசித்திருக்கிறாராம்.

மொழித் தகராறு உருவாகியுள்ள (போராட்ட) சூழ்நிலை வளருவது, தான் இலண்டன் செல்வதைத் தடுப்பதாகவும் அவர் காரணம் காட்டியிருக்கிறாராம்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 17—6—57 திங்கள்

# கபட நாடகம்!

★

டில்லிப் பெரியவர்கள் ஏழை—எளிய மக்கள் மீது விதித்துள்ள புதிய வரி விதிப்புகளின் கொடுமை வேகமாக மக்களால் உணரப்பட்டு வருகிறது. அந்தக் கொடுமையை அனுபவிக்கும் மக்கள், தங்களுக்கு எதிராகத் திரண்டெழுந்து காட்டக்கூடிய எதிர்ப்பை முறியடிப்பதையும், அவர்களின் ஆத்திரத்தைத் தணிப்பதையும் உள்நோக்கமாகக்கொண்டு, சில கவர்ச்சிகரமான அறிவிப்புகளின் மூலம் மக்களின் கவனத்தைத் திசை திருப்ப நினைக்கிறார்கள்.

'மத்திய சர்க்கார் மந்திரிகள் தாங்களே வலியவந்து சம்பளத்தில் பத்து சத விகிதத்தைக் குறைத்துக்கொள்ளச் சம்மதித்திருக்கிறார்கள்' என்பதும், 'அதனைத்தொடர்ந்து சென்னை மற்றும் சில மாநிலங்களின் காங்கிரஸ் மந்திரிகள் தங்களின் ஆடம்பரச் செலவுகளைக் குறைத்துக் கொள்ளுவார்கள்' என்பதும் அத்தகைய கவர்ச்சிகரமான அறிவிப்புகளில் சிலவாகும்.

இந்த அறிவிப்புகளுக்கு வெளிப்படையான காரணமாகப் பெரியவர்கள் சொல்லுவதெல்லாம், 'சிக்கனமாக வாழ வேண்டும்' என்பதுதான்.

'நாங்கள் வழிகாட்டுகிறோம்; மக்களே! நீங்களும் சிக்கனமாக வாழுங்கள்; வயிற்றைக் கட்டி வாயைக் கட்டி வரியைத் தாருங்கள்' என்கிறார்கள்.

பெரியவர்கள் சொல்லுகிற 'சிக்கனம்' என்பதுதான் இந்த அறிவிப்புகளுக்கான காரணமா என்றால், இல்லை! மக்களை, இந்த அறிவிப்புகளின் 'கவர்ச்சி'யினால் ஏமாற்றிவிட — வஞ்சித்துவிட நினைக்கிறார்கள்.

'சிக்கனம்' என்ற பெயரால் இவர்கள் தங்களது சம்பளத்தைக் குறைத்துக் கொள்ளுவதென்பது, பெரியதொரு தொகையை மிச்சப்படுத்தித் தந்துவிடாது என்பது ஒருபுறமிருக்க, இத்தனை ஆண்டுகளாக இவர்கள்—இப்போது குறைத்துக் கொள்ளுகிறோம் என்கிறார்களே—அந்த அளவுக்கேனும் அதிகமாகச் சம்பளம் பெற்று ஆடம்பரமாக வாழ்ந்தார்களே; அது நியாயமா என்ற கேள்விக்கு என்ன பதில் கூறுகிறார்களோ தெரியவில்லை?

'சிக்கனம்' என்பது, மத்திய சர்க்கார்—மாநில சர்க்கார் நிர்வாகத் துறைகள் பலவற்றிலும் மிகக் கடுமையாக அமுல் செய்யப்படவேண்டும் என்றுதான் மக்கள் எதிர்பார்க்கிறார்களே தவிர, மந்திரிகள் தங்கள் சம்பளத்தைப் பெயரளவுக்குக் குறைத்துக்கொள்வதினாலோ, சில சம்பிரதாயமான 'ஜபர்தஸ்து'களை வெளிப்படையாகத் தெரியும்வண்ணம் தொடர்ந்து கொண்டாடமாட்டார்கள் என்பதினாலோ திருப்தியடைந்துவிட மாட்டார்கள்.

'இராணுவ நிர்வாகத்திற்காக டில்லி சர்க்கார் இத்தனை காலமாக ஆண்டுதோறும் செலவிட்டுவந்த சுமார் ரூ. 200 கோடி காணாது என்று, இந்த ஆண்டில் மேலும் ரூ. 50 கோடி வரை செலவிட உத்தேசித்திருக்கிறார்கள். ஒரு பக்கம், 'சிக்கனம்' என்று நாடகமாடிக்கொண்டே, மறுபுறம், 'அதிகம்' என்று: ஏற்கனவே கண்டனத்திற்கு ஆளான ஒரு செலவினத்தை 25 சதவிகிதத்திற்கும் அதிகமாகக் கூட்டுவது உண்மையில் இவர்கள் சிக்கனத்தை விரும்புகிறார்கள் என்பதையா காட்டுகிறது?

இதுகாறும் சிவில் நிர்வாகத்திற்குச் செலவிட்டு வந்த சுமார் ரூ. 133 கோடி போதுமானதல்ல என்று கருதி, இந்த ஆண்டில் மேலும் ரூ. 57 - கோடிக்கும் அதிகமாக - அதாவது, சுமார் 30 சத விகிதத்திற்கும் அதிகமாகச் செலவிட உத்தேசித்திருக்கிறார்கள். இந்த உத்தேச அதிகச் செலவிற்கும், இனிமேல்தான் டெல்லிப் பெரியவர்கள், நியாயங்களைத் தேடி சொல்லியாக வேண்டும்.

'ரூ. 50 கோடிக்கும் அதிகமாக இராணுவத்திற்குச் செலவிட உத்தேசித்திருப்பது, எந்தவகையாலும், இராணுவத்தின் போர்த் திறத்தைக் கூட்டுவதற்குப் பயன்படப் போவதில்லை' என்று மக்கள் சபையில் எழுந்த கண்டனத்திற்கும், பஞ்ச சீலப் பிதாக்கள் பொறுப்பானபதில் ஏதும் தந்ததாகவும் தெரியவில்லை.

மேலும், இந்தத் தற்காப்பு இலாகாதான் ஊழல்களின் பிறப்பிடமாக இருந்து வந்திருக்கிறது — வருகிறது என்பதை, இந்தியாவின் பிரதான கணக்குத் தணிக்கையாளரும், மக்கள் சபைப் பொதுக்கணக்குத் தணிக்கைக் குழுவினரும் மறுக்கவொண்ணு ஆதாரங்களால் நிரூபித்திருக்கின்றனர்.

டெல்லியின் வேறு பல இலாகாக்களும், ஊழல்களில் உழலுவனவே என்பதும் தெரிந்ததே!

மேலும் வெளிநாடுகளிலுள்ள தூதுவர்கள், தாங்கள் ஒரு பாரியான மக்கள் கூட்டத்தின் பிரதிநிதிகள் என்பதையே மறந்து, அமெரிக்க நாட்டுத் தூதுவர்களைப்போல பணத்தை வாரி இறைத்து சுக போகங்களில் திளைத்திருக்கிறார்கள் என்பதை உலகமே அறியும்.

இந்த ஊழல்களை எல்லாம் ஒழிக்கவும், ஆடம்பரங்களை மட்டுப்படுத்தவும், பல கோடி ரூபாய்களைப் பாழடிப்பதைத் தடுக்கவும் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வராமல், சிக்கன நடவடிக்கை என்று கூறி 'சம்பளத்தைக் குறைத்துக் கொள்கிறோம்' என்ற அறிவிப்புகளை வெளியிடுவது, மக்களை ஏமாற்றும் நயவஞ்சகம்—புதிய வரி விதிப்பின் கொடுமைகளால் மக்கள் ஆர்த்தெழாமல் தடுக்கும் சதி - கபட நாடகம் என்பதைத் தவிர, வேறொன்றுமில்லை என்றே கருதுகிறோம்.

# தென்மண்டலத்திற்கான தொழில் நுணுக்கக் கல்விக் கழகம்

## சென்னையில் நிறுவப்படுமெனத் தகவல்

புதுடில்லி, ஜுன் 14—

மேற்கு ஜெர்மன் சர்க்காரின் ஒத்துழைப்புடன், உயர் தொழில் நுணுக்கக் கல்விக் கழகம் ஒன்று தென்மண்டலத்திற்காக சென்னையில் நிறுவப்படும் என்று டெல்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்!

இதுபோன்ற கழகங்களில் இது மூன்றாவதாம்.

ஒன்று, கோரக்பூரில் ஏற்கனவே நிறுவப்பட்டு நடைபெற்று வருகிறது; பம்பாயில், ரஷ்யாவின் கூட்டுறவுடன் ஐ. நா. தொழிற் கல்வி உதவித் திட்டத்தின்கீழ் நிறுவப்பட்டு வருகிறது என்றும் கூறப்படுகிறது.

நான்காவது கல்விக் கழகம் ஒன்று கான்பூரில் நிறுவப்படுமாம்.

## காஷ்மீரை விடுவிக்க!

### பாகிஸ்தானில் புதிய அரசியல் கட்சியாம்

கராச்சி, ஜுன் 15—

காஷ்மீரை 'இந்தியாவின் ஆக்கிரமிப்பி'லிருந்து விடுவிப்பதற்காக காஷ்மீரிலேயே போராட்டம் நடத்துவதற்கென பாகிஸ்தானில் புதியதோர் அரசியல் கட்சி நிறுவப்பட்டிருக்கிறதாம்.

இந்தக் கட்சியின் ஸ்தாபகரும் அமைப்பாளரும், முன்னாள் மேஜர் ஜெனரலான அக்பர்கான் என்பவராம்.

இந்தக் கட்சியினர், ஜமீன் ஒழிப்பு, நிலச் சீர்திருத்தம் போன்றவற்றிற்காகவும் பாடுபடுவார்களாம்.

கட்சியின்கிளைகள் பாகிஸ்தான் முழுவதும் நிறுவப்படும் என்றும், உலகில் உள்ள முஸ்லிம் நாடுகளுடன் பாகிஸ்தான் உறவுகளை வளர்த்துக்கொள்ள முயற்சிக்கும் என்றும் கட்சியின் காராச்சிக் கிளை அமைப்பாளரான டாக்டர் முகம்மது யாசின் ஜுபேரி என்பார் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறாராம்

## வீடின்றி மக்கள் தவிக்கின்றனர்!

### ரூ. 2 கோடி செலவில் ஆடம்பரக் கட்டிடமா?

பெங்களூர், ஜுன் 15—

"பட்டினியாலும், வீடில்லாமலும் ஆயிரக்கணக்கான மக்கள் தவிக்கும்போது, ரூ. 2 கோடி செலவிட்டு கட்டிடங்கள் கட்டுவது வருந்தத்தக்கது. காந்தியார் உயிருடன் இருந்தால் அந்தக் கட்டிடத்தை உல்லாசப் பிரயாணிகளுக்காக மத்திய அரசாங்கத்திடம் ஒப்படைக்க சொல்லி இருப்பார்" என்று, வி. எஸ். படீல் என்பவர் மைசூர் சட்டசபையில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மைசூர் சட்டசபை கூடுவதற்காக ரூ. 2 கோடி செலவில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

## இன பேதத்தை ஒழிக்க நடவடிக்கை!

நைரோபி, ஜுன் 14—

கெனியாவில் உள்ள சிற்றுண்டிச் சாலைகள், மற்றும் பொது இடங்களில் இன பேதத்தை ஒழித்துக் கட்டுவதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள கெனியா சட்டசபை சம்மதம் தெரிவித்துள்ளது.

## வெள்ள உடைப்புகளினால் இரயில் விபத்துக்கள்

### கணக்கெடுத்து ஆராய்ச்சி

கோரக்பூர், ஜுன் 14—

கடந்த 40 ஆண்டுகளில் இந்திய இரயில்வேக்களில் வெள்ளத்தினால் ஏற்பட்ட உடைப்புகள் காரணமாக ஏற்பட்ட விபத்துக்கள் பற்றி கணக்கெடுத்து, ஆராய்ச்சி நடத்துவது என்று, ரூர்க்கி பல்கலைக் கழக துணைவேந்தர் தலைமையில் அமைந்துள்ள எஞ்சினீயர் குழு முடிவு செய்திருக்கிறதாம்.

இந்தக் குழு, அரியலூர் விபத்துக்குப் பிறகு டில்லி சர்க்காரால் நியமிக்கப்பட்டதாகும்.

## வெள்ளாடு உரோம ஆராய்ச்சி நிலையம்

### சின்ன சேலத்தில் ஏற்படும்?

சென்னை, ஜுன் 15—

தமிழ்நாட்டிலுள்ள வெள்ளாடுகளின் உரோமத்தின் தரத்தையும் உற்பத்தியையும் உயர்த்துவதற்காக சின்ன சேலத்தில் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் ஒப்புதல் அளித்திருக்கிறதாம்.

இந்தியாவிலேயே மிகப் பெரிய ஆராய்ச்சி நிலையமாக இருக்குமென எதிர்பார்க்கப்படும் இந்நிலையம் தென்னார்காடு — சேலம் மாவட்டங்களுக்கு இடையே 1,700 ஏக்கர் பரப்பளவுள்ள இடத்தில் அமையுமாம்.

## 1960-61-ம் ஆண்டில் 1,80,000 லாரிகள் ஓடுமாம்!

சென்னை, ஜுன் 15—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில் 20 கோடி டன் பொருள்களை நீண்டதூரம் எற்றச்செல்ல வேண்டிய அவசியம் ஏற்படுமாம். இரயில் மூலம் 16,20,00,000 கோடி டன் பொருள்களும், தண்ணீர் வழியாக 80 இலட்சம் டன் பொருள்களும், மற்ற 3 கோடி டன் பொருள்கள் ரோடு போக்குவரத்து சாதனங்கள் மூலமும் ஏற்றிச் செல்ல வேண்டியிருக்குமாம்.

தற்சமயம் ஒரு இலட்சம் லாரிகள் ஓடுகின்றனவாம்; இனி அதிகரிக்கும் தேவையைப் பூர்த்தி செய்ய ஆண்டுக்கு 20 சத விகிதம் லாரிகள் அதிகரிக்க வேண்டுமாம். இந்த விகிதத்தில் அபிவிருத்தியடையுமானால் 1960-61—ல் சுமார் 1,80,000 லாரிகள் ஓடும் என்று கூறப்பட்டிருக்கிறது.

## அரிசி இட்டிலிக்கு ஆபத்து ஏற்படும்?

புதுடில்லி, ஜுன் 13—

தற்போது உணவு விடுதிகளில் அரிசியினால் தயாரிக்கப்பட்டு விற்கப்படும் இட்டிலிக்கும் ஆபத்து ஏற்படும் நிலைதோன்றியிருக்கிறது.

அரிசிக்கு மாற்றாக கோதுமை போன்ற வேறு தானியத்தை பயன்படுத்தி இட்டிலி தயாரிக்க வேண்டும் என்று சிற்றுண்டி சாலைகளை நடத்துபவர்களை மத்திய அரசாங்க உணவு அமைச்சர் ஏ. பி. செயின் கேட்டுக் கொண்டுள்ளாராம்.

## தென் மண்டலக் குழு

### ஜுலை முதல் தேதி கூடும்

தென் மண்டலக் குழு வரும் ஜுலை 1-ந் தேதி கூடும் என்று தெரியவருகிறது.

இந்தக் குழுவில் சென்னை, கேரள — ஆந்திர மாநிலங்கள் அடங்கியிருப்பது தெரிந்ததே.

சென்னையும் கேரளமும் ஜுலை முதல் தேதியன்று குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சம்மதித்துவிட்டன என்றும், ஆந்திர சர்க்காரின் சம்மதம்தான் தெரியவில்லை என்றும் டில்லி உள்நாட்டிலாகா தெரிவிக்கிறது.

## மேல் சபைகள் உறுப்பினர் எண்ணிக்கை

### அதிகப்படுத்த டில்லி முடிவு

புதுடில்லி, ஜுன் 14—

எந்தெந்த மாநிலங்களில் எல்லாம் மேல்(சட்ட)சபை இருக்கிறதோ அங்கெல்லாம் அந்தச் சபையின் உருவத்தைப் பெரிதாக்க டில்லி முடிவு செய்திருக்கிறதாம்!

இதுவரை சட்ட சபையின் உறுப்பினர் எண்ணிக்கையில் நான்கில் ஒரு பாகம்தான் மேல் சபை உறுப்பினர் எண்ணிக்கை இருந்தது; இனி அந்த எண்ணிக்கை சட்டசபை உறுப்பினர் தொகையில் மூன்றில் ஒரு பாகமாக உயரும்.

அத்துடன் ஆந்திர பிரதேச மாநிலத்திற்கும் ஒரு மேல் சபை உருவாக்கப்படும்.

அரசியல் சட்ட ஏழாவது திருத்தச் சட்டம் ஃப்படி மேல் சபைகளின் உறுப்பினர் தொகையை அதிகரிக்க அதிகாரமளித்திருக்கிறதாம்.

## சட்ட சபையில்

### எதிர்க் கட்சியினர் வெளிநடப்பு

சந்திகார், ஜுன் 14—

கடந்த 11-ந் தேதி இந்தி மொழிக்குப் பாதுகாப்பு வேண்டும் என்று ஆரிய சமாஜத்தினர் ஆர்ப்பாட்டம் நடத்தினராம். அந்த ஆர்ப்பாட்டக்காரர்களை அடித்தும் துன்புறுத்தியும் கொடுமைப் படுத்தினர் என்றும் அதை பற்றி விவாதிக்க வேண்டும் என்றும் சட்ட சபையில் எதிர்க்கட்சியினர் பிரேரபணைகள் கொண்டுவந்தனராம்.

இவை வீண் புகார் என்றும், இது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும் சபைத் தலைவர் குறிப்பிட்டு, பிரேரபணைகளை நிராகரித்து விட்டார்; இதனைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் சட்ட சபையில் இருந்து வெளியேறி விட்டனராம்.

## நாகம் நஞ்சைக் கக்க வேண்டுமாம்!

ஜலந்தர், ஜுன் 14—

பஞ்சாபில் இந்தி வெறியர்கள் நடத்திவரும் போராட்டத்தைக் கைவிடவேண்டும் என்று பஞ்சாப் மாவட்டக் காங்கிரஸ் கமிட்டி கேட்டுக்கொண்டுள்ளது.

## நீதிமன்றங்களின் நடைமுறைகள் எளிதாகும்?

புதுடில்லி, ஜுன் 14—

நீதிமன்றங்களில் வழக்குகளை முடிவு செய்வதில் ஏற்படும் தாமதத்தைக் குறைத்து விரைவில் நீதி வழங்கவும், நீதிமன்றத்தின் நடைமுறைகளை எளிதாக்கவும் இந்திய அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

இப்பிரச்சினை சம்பந்தமாக முழு அளவில் ஆராய்ந்து, இதற்கான யோசனைகளை அறிவிக்குமாறு சட்டக் குழுவை அரசாங்கம் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

### நீதிபதிகளின் பொறுப்பு பற்றி உள்நாட்டு அமைச்சர்

'துரிதமாக நியாயம் வழங்குவது நீதிபதிகளின் பொறுப்பாகும்; நீதிபரிபாலனத்திற்குச் சம்பந்தமில்லாத விஷயங்களில் அவர்கள், தங்கள் சக்தியை வீணாக்குவது விரும்பத்தக்கதல்ல' என்று, மத்திய உள்நாட்டமைச்சர் பந்த், மாநில முதலமைச்சர்களிடம் கூறியதாகத் தெரியவருகிறது.

## தண்ணீர்ப் பஞ்சம்!

வியன்னா, ஜுன் 14—

புடாபெஸ்டில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதாம்!

தொழிற்சாலைக்கு விநியோகம் செய்யப்படும் தண்ணீரில் 10 சத விகிதம் குறைக்கப்பட்டுள்ளது. நிலைமை சீர்பட பெருத்த மழையை எதிர்நோக்கி புடாபெஸ்ட் உள்ளதாம்.

# கழகச் செய்திகள்

**கம்பம் :**

22—5—57-ல், கம்பம் காந்தி மதி நிலையத்தில் செயலாளர் மீரான் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டத்தில், ஊராட்சி மன்றம் வீட்டு வரியை உயர்த்தியதைக் கண்டித்தும், பழைய வீட்டு வரியின் அளவிலேயே குறைக்கக் கோரியும் பொதுக்கூட்டம் நடத்துவது பற்றியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**முதுகுளத்தூர் :**

இவ்வூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஆர். எம். அலியார் தலைமையில் நடைபெற்றபோது, கமுதி தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. எஸ். காமாட்சியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**ஆரணி (வ.ஆ.மா.) :**

இவ்வூர் தி. மு. கழகத்திற்கு தோழர்கள் தி. எத்திராசன் செயலாளராகவும், ப. செல்வரசு துணைச் செயலாளராகவும், கே. பி. சுந்தரம் பொருளாளராகவும், எஸ். ஏ. கண்ணையன், தி. எத்திராசன் ஆகியோர் மாவட்டப் பிரதிநிதிகளாகவும், 9 பேர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

**ஆதம்பாக்கம் :**

இக்கிராமத்தில் தோழர் தி. ந. சம்பந்தம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழக அமைப்புக் கூட்டத்தில், தோழர்கள் டி. எஸ். மாணிக்கம் செயலாளராகவும், பி. வெங்கடேசன் துணைச் செயலாளராகவும், எஸ். ஆறுமுகம் பொருளாளராகவும், ஆ. கோ. கிருபாநிதி மாவட்டப் பிரதிநிதியாகவும், சே. இராதா கிருட்டிணன், கே. எம். லோகநாதன், துரை-சிவப்பிரகாசம், பி. இராமமூர்த்தி, ஜி. வெங்கடேசலு, எம். சீனுவாசன், ஜி. எம். எஸ். புகாரி, ஆர். கோபால், கோ. இராமநாதன், டி. பலராமன். சி. கண்ணன் ஆகியோர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**காரைக்குறிச்சி :**

30—5—57 மாலை 4 மணிக்கு, இவ்வூர் தி. மு. கழகத் துவக்க விழா மாரியம்மன் கோயில் தோப்பு மறுமலர்ச்சி அரங்கில் நடைபெற்றது; தோழர் சா. இராமசாமி தலைமை வகித்து கழகத்தை துவக்கிவைத்துப் பேசிய பின், தோழர்கள் பொ. தருமன், சோ. சி. மணி, காளிதாசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். மன்னார்குடி தோழர் சுந்தரேசன் இசை விருந்தும் நடைபெற்றது.

**சென்னை 12வது வட்டம் :**

19—5—57 காலை 9 மணிக்கு சென்னை 12-வது வட்ட தி. மு. கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் தோழர் ஏ. கண்ணப்பன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது காலியாக இருந்த துணைச்செயலாளர் பொறுப்புக்கு தோழர் எஸ். இராமசாமி ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

**திருவலம் :**

27—5—57 அன்று திருவலம் தி. மு. கழகக் கிளையின் துவக்க விழா நடைபெற்றது. தோழர் தம்பிதாசன் தலைமையில், தோழர் பாண்டியன் அவர்கள் பேசிய பின் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் புதிய வரிக் கொடுமைகளை எதிர்த்தும் ஜனநாயகக் கடமைகளை மக்களுக்கு அறிவுறுத்தியும், புதிய வரித் திட்டத்தின்மேல் நிதிஅமைச்சர் இராஜிநாமா செய்து மறு தேர்தலுக்கு நிற்க தயாரா என வினவியும், நல்லதோர் உரையாற்றினர். செயலாளர் நடேசன் நன்றிகூற கூட்டம் இனிது முடிந்தது.

**சேலம்—கன்னங்குறிச்சி :**

இவ்வூர் தி. மு. கழகத்திற்கு கா. வே. ராசா செயலாளராகவும், க. ஆ. தங்கவேலன் துணைச் செயலாளராகவும், கே. கே. குமாரசாமி பொருளாளராகவும், சு. நடராசன் மாவட்டப் பிரதிநிதியாகவும், செயற்குழு உறுப்பினர்களாக தோழர்கள் அண்ணாமலை, பெரியசாமி, பழனி, முத்து, கந்தசாமி, வீரப்பன், துரைசாமி ஆகியோரும்தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**பழனி 7-வது வட்டம் :**

மேற்படி வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம் தோழர் மாரியப்பன் தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் சொக்கையா செயலாளராகவும், பழனியப்பன் துணைச்செயலாளராகவும், கே. மாரியப்பன் பொருளாளராகவும், வீ. கோட்டையன், கே. பெருமாள், எம். கருப்பண்ணன், எஸ். காளிமுத்து ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும், வி. கருப்பசாமி நகர பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**பழனி 9-வது வட்டம் :**

மேற்படி வட்ட தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 20-4-57ல் தோழர் பி. எஸ். ஷேக் தலைமையில் நடைபெற்றபோது, தோழர் கே. கிருஷ்ணமூர்த்தி கொடியேற்றுவித்தும், தோழர்கள் கா. வெங்கடாசலம், அப்துல்ஹாதி, நூர்முகம்மது ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கியும் சொற்பொழிவாற்றினர். பின்னர் தோழர்கள் பி. கண்ணன் செயலாளராகவும், மீனாட்சிசுந்தரம் துணைச்செயலாளராகவும், சி. இராமையா பொருளாளராகவும், மு. வடிவேல், எஸ். சம்பந்தம், மு. சுந்தராசன், ஆர். மோகன் ஆகியோர் செயற்குழுவினராகவும், கா. மணிசேகரன் நகர பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டதோடு, ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

**காடுபட்டி**

4—5—57ல், காடுபட்டி தி.மு. கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் சர்க்கரை தலைமையில் நடைபெற்றபோது, தோழர்கள் என். வி. நடராசன் சமதர்மம், மெய்யப்பன், மா. நெடுஞ்செழியன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

**கரூர்—வேடிச்சிபாளையம்**

4—5—57 இரவு 9 மணிக்கு இவ்வூர் தி. மு. கழக செயற்குழு கூட்டம் "அண்ணா இல்லத்தில், தோழர் எஸ். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றபோது, 3 முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சென்னப்பநாயக்கன் பாளையம் :**

25—5—57ல், சென்னப்பநாயக்கன் பாளையத்தில் தோழர் மூசா அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது; தோழர்கள் கோவிந்தராசு, நாராயணன், சாமிநாதன் சண்முகம் முதலியோர் பேசியபின் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் டெல்லி அரசினரின் வரிக் கொடுமைகளைக் கண்டித்தும், தேர்தல் முடிவுகளை விளக்கியும், அரியதோர் விளக்கவுரை ஆற்றினர். செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

**அம்மம்பேட்டை - (சோமபுரம்) :**

24—5—57 அன்று மாலை 6-30 மணி யளவில் அம்மம் பேட்டை தி. மு. கழகத் துவக்க விழா நடைபெற்றது. பல இடங்களில் கொடியேற்றி வைத்தும், ஊர்வலத்தில் கலந்துகொண்டும் தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் சிறப்பித்தார். தோழர்

# திருச்சி, கோவை மாவட்டங்களில் கி. மனோகரன் சுற்றுப்பயணம்

**அமராவதி :**

31—5—57ல், தி. மு. கழகச் சார்பில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஏராளமான பொது மக்கள், தொழிலாளர்கள் கூடியிருந்தனர். தோழர் கி. மனோகரன் அவர்கள், தி. மு. கழக இலட்சியங்களை விளக்கியும், தேர்தலுக்குபின் கழகத்திற்கு உருவாகிவரும் போராதரவு பற்றியும், இரண்டாவது ஐந்தாண்டு திட்டங்களின் மூலம் தென்னாடு புறக்கணிக்கப்படுவது பற்றியும் அதற்கு எடுத்துக்காட்டாக பக்ரா நங்கல்—அமராவதி அணைக்கட்டுகளின் தாரதம்யங்களின் பாகுபாட்டைச் சுட்டிக்காட்டி, 'ஏக இந்திய' வாதத்தில் மறைந்துள்ள வஞ்சகத்தை விளக்கியும், பேசினார்.

புதிய வரிக் கொடுமைகளைக் கண்டித்தும், 'திட்டத்திற்காக மக்களா? மக்களுக்காக திட்டமா? என்ற குரல் எழுப்பி, ஆதாரத்தோடும், புள்ளி விவரங்களோடும் பேசினார்.

கூட்டத்தில் தோழர்கள் பல்லடம்—பொன்னுசாமி, உடுமலை-நாராயணன் ஆகியோர் பேசினர்.

**குளித்தலை :**

2—6—57-ல், திராவிட மாணவர் முன்னேற்றக் கழக துவக்கத் விழா பொதுக் கூட்டம், குளித்தலை வ. உ. சி. சதுக்கத்தில் தோழர் வை. சிவராஜ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள். கி. மனோகரன், குளித்தலை-முத்துகிருஷ்ணன், பல்லடம்-பொன்னுசாமி ஆகியோர் பேசினர்.

தோழர் கி. மனோகரன் அவர்கள் அரசியலில் மாணவர்கள் கடமை பற்றியும், கம்யூனிஸ்டுக் கட்சியின் தற்கால அரசியல் நிலை குறித்தும், தி. மு. க. இலட்சியக் கோட்பாடுகள் குறித்தும், புதிய வரிக் கொடுமைகளைக் கண்டித்தும், தாயகத்திற்கு 'தமிழ் நாடு' என பெயர் சூட்ட மறுத்த காங்கிரஸ் மந்திரி சபையைக் கண்டித்தும் விளக்க உரை ஆற்றினர்.

தோழர் குளித்தலை - முத்துகிருஷ்ணன் பேசுகையில், விவசாயிகளின் நிலைமை பற்றியும், குறிப்பாக 60—40 சட்டத்தினால் ஏற்பட்டிருக்கும் குழப்பங்களைப் பற்றியும், அது சம்பந்தமாக சர்க்கார் உடனடியாக எடுத்துக் கொள்ள வேண்டிய நடவடிக்கைகளைப் பற்றியும் குறிப்பாக, பேட்டவாய்த்தலையில் புதிதாக துவக்க இருக்கும் சர்க்கரை ஆலையின் கரும்பு சாகுபடியால் நங்கவரம் வட்டாரத்திலுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட இருப்பதை சுட்டிக்காட்டி, பாதிக்கப்படும் விவசாயிகளுக்கு சர்க்கார் பாதுகாப்பு அளிக்க உடனடியாக முன் வரவேண்டுமென்றும் கோரியதோடு, நங்கவரம் பகுதி விவசாயிகள் போராடும் நியாயமான கோரிக்கைகளுக்குப் பொதுமக்களும், மற்ற பகுதி விவசாயிகளும் நல்ல ஆதரவு கொடுக்க வேண்டும் என்றும், குளித்தலைப் பகுதியில் சில விவசாயிகளை குழப்பத்திற்கும், தொல்லைக்கும் ஆளாக்கிவரும் கம்யூனிஸ்டுகளைக் கண்டித்தும் பேசினார். தோழர் பல்லடம்—பொன்னுசாமியும் பேசினர்.

**கரூர் :**

3—6—57-ல், கரூர் பஸ் நிலயத்திற்கு அருகிலுள்ள மைதானத்தில், புதிய வரிக் கண்டன கூட்டம் தி. மு. கழகச் சார்பில் நடைபெற்றது. தோழர்கள் கி. மனோகரன், என். இரத்தினம், எம். குழந்தைவேல், பல்லடம்—பொன்னுசாமி ஆகியோர் பேசினர்.

**சின்னையகவுண்டன்வலசு :**

4—6—57ல், தாரை வட்டம் சின்னைய கவுண்டன்வலசு தி.மு. கழக துவக்க விழாப் பொதுக் கூட்டம் கண்ணியவாடி பெரியார் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் ஏராளமான பொது மக்கள் கலந்துகொண்டனர். தி. மு. கழகத்தின் முதல் கூட்டமாக நடந்த அந்த விழாவில், தோழர்கள் கி. மனோகரன், முத்துகிருஷ்ணன் ஆகியோர் பேசினர்.

**கொமரபாளையம் :**

4—6—57-ல் தாரை வட்டம் கொமரபாளையத்தில் தி. மு. க. துவக்க விழா பொதுக் கூட்டம் தோழர் இராமசாமி கவுண்டர் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. கூட்டத்தில் புதுவரிகளைக் கண்டித்தும், தி.மு.க. கொள்கைகளை விளக்கியும் தோழர்கள் கி. மனோகரன், முத்துகிருஷ்ணன், பல்லடம்-பொன்னுசாமி, கண்ணிவாடி பெரியார் ஆகியோர் பேசினர்.

**பட்டுத்துரை :**

5—6—57-ல் தாரை வட்டம் பட்டுத்துரை, தி. மு. க. துவக்க விழா கண்ணிவாடி பெரியார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. அதுபோது, கழக கொள்கைகளை விளக்கியும், வடவரின் ஓரவஞ்சனையைக் கண்டித்தும், மாநில சர்க்காரின் கையாலாகாத செயலை ஆதாரத்தோடு விளக்கிக் கூறியும், திராவிடம் தனியாகப் பிரிந்தாலன்றி தென்னகம் வாழ்வதற்கு வழி இல்லை என்றும் தக்க விளக்கங்களுடன் தோழர்கள் கி. மனோகரன், முத்துகிருஷ்ணன், பல்லடம்—பொன்னுசாமி ஆகியோர் பேசினர். விளக்கம் பெற்ற மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

**ஆலாம்பாளையம் :**

5—6—57ல், ஆலாம்பாளையம் தி. மு. க. துவக்க விழா பொதுக் கூட்டம் கண்ணிவாடி பெரியார் தலைமையில் நடைபெற்றது. பொது மக்கள் ஏராளமாக திரண்டிருந்தனர். தி. மு. க. இலட்சியங்கள், தி. மு. கழகத்தின் சட்டசபைத் தொண்டு, ஆட்சியாளர்களின் தாய்மொழிப் பற்று இன்னும், டில்லிக்கு காவடி தூக்கும் கீழ்த்தர அரசியல் வாழ்வு, வரிக்கொடுமை ஆகியவை பற்றி தோழர்கள் கி. மனோகரன் முத்துகிருஷ்ணன், பல்லடம்—பொன்னுசாமி ஆகியோர் பேசினர்.

தாரை வட்டத்தில் தி. மு. க. கிளைகளை உருவாக்குவதில் தீவிர உணர்ச்சியோடு பணியாற்றும் கண்ணிவாடி பெரியார் அவர்கள் ஒத்துழைப்பும், ஆக்கமும் ஊக்கமும் கலந்த செயலாற்றும் தன்மையும் பெரிதும் குறிப்பிடத்தக்கது ஆகும்.

---

எஸ். ஏ. துரை அவர்கள் தலைமையில், கோ. சி. மணி, பொ. தர்மன் முதலியோர் விவசாய மக்கள் ஒன்று திரண்டு கட்டுக்கோப்பாக போராடினால்தான் சலுகைகளை பெறமுடியும் என்று எடுத்துக்காட்டினர்கள்.

தோழர் என். எஸ். இளங்கோ அவர்கள் கழகக் கிளையை துவக்கி வைத்து அரியதோர் கருத்துரை வழங்கினர்.

**புதுப்பட்டினம் :**

22—5—57 அன்று புதுப்பட்டினம் தி. மு. கழகக் கிளையின் துவக்க விழா சிறப்பாக நடைபெற்றது. கழகக் கொடியினை தோழர் இளங்கோ ஏற்றி, கிளையினை துவக்கிவைத்து சிறப்பித்தார்.

தோழர் பிச்சைக்கண்ணு தலைமையில் தோழர்கள் கலாநேசன், இராமையான், கு. அடைக்கலம் முதலியோர் சொற்பொழிவாற்றிய பின் தோழர் இளங்கோ, நல்லதோர் உரை நிகழ்த்தினர்.

---

மேற்கு மத்திய இரயில்வேக்களுக்காக இந்திய அரசாங்கம் 20 மின்சார இரயில் பெட்டிகளை ஜப்பானிடம் ஆர்டர் கொடுத்திருந்தது. இந்தப் பெட்டிகள் தயாரிக்கப்பட்டு பம்பாய் துறைமுகம் வந்தடைந்துள்ளது.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## இன்னும் எத்தனை காலமோ ?

ஐயா,

சென்னை மாநில சர்க்கார் காரியாலயங்களில் பணியாற்றும் குமாஸ்தாக்கள் படுகின்ற தொல்லைகளைப் பற்றியும், அவர்கள் நடத்தப்படுகின்ற கேவலமான முறைகள் பற்றியும் பல முறைகள் பல பத்திரிகைகளில் எழுதியும்கூட இன்னும் சர்க்கார், இந்தப் பிரச்சினையைக் கொஞ்சம் கூட கவனித்ததாகத் தெரியவில்லை.

பொதுவாக அரசாங்க அலுவலகங்கள் அனைத்திலுமே, குமாஸ்தாக்களுக்கான வேலை நேரம் காலை 11 மணி முதல் மாலை 5-மணி வரைதான் என்று வரையறுக்கப்பட்டிருந்தும்கூட, அங்கு காலை 10-மணிக்குள்ளாகவே சென்று, இரவு 8-மணிவரையிலும் அலுவலகங்களில் 'காவல்' இருந்துவிட்டு இரவு 9 மணிக்கு வீடு திரும்புகிறவர்களாக இருந்தால்தான் 'நல்ல பெயர்' எடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதனிடையில் காகித அளவில்தான் விடுமுறை நாட்கள் கிடைக்கின்றனவே தவிர, ஒருவிடுமுறை நாளாவது குமஸ்தாக்களுக்கு ஓய்வு கிடைப்பதில்லை—ஓய்வெடுக்க விடுவதில்லை. ஞாயிற்றுக்கிழமைகளில்கூட தவறாமல் அலுவலகம் வருமாறு கட்டாயப் படுகிறார்கள். ஏதாவது உடம்புக் கோளாறுகளின் காரணமாக ஞாயிற்றுக்கிழமைகளில் வேலைக்குப் போகாவிட்டால் கூட அவர்கள் தயவுதாட்சண்யமில்லாமல் வேலையை விட்டே நீக்கபட்டு விடுகிறார்கள்; அல்லது ஒரு ஆண்டு இரு ஆண்டுகளுக்கு எல்லா ஞாயிற்றுகிழமைகளிலும் மற்றும் பொது விடுமுறை நாட்களிலும் அலுவலகம் வரவேண்டுமென்று அந்தந்த அலுவலக அதிகாரிகளால் கட்டளை யிடப் படுகிறார்கள். அதை மீறினால் வந்தது ஆபத்து. சர்க்கார் குமாஸ்தா ஆகிவிடுவதால் காலம் முழுவதும் இப்படியே உயிரைக் கொடுக்க வேண்டியதானா? ஏழை சர்க்கார் குமாஸ்தாக்களுக்குக் கதி மோட்சமே கிடையாதா?

'ஒரு சர்க்கார் ஊழியன்'

---

**எதிர்ப்பில் உயர்ந்தகொடி**

தென் ஆற்காடு மாவட்டம், கூடலூர் வட்டம்—சம்பாரெட்டிப்பாளையத்தை அடுத்த பூவாணிக் குப்பத்தில் 22—4—57ல் பலத்த எதிர்ப்புக்கிடையே, தோழர் நா. இராமாநுசம் முன்னிலையில் கொட்டாரக்குடி தி.மு. கழகச் செயலாளர் தோழர் இரா. சந்தானம் அவர்கள், நமது கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றிவைத்தார்.

அன்று இக்கொடி பறப்பதற்கு 'முழு எதிர்ப்பைக் காட்டியவர்கள்' இன்று அங்கு கழகத்திற்கு வளர்ந்துவரும் ஆதரவு கண்டு, தங்கள் செய்கைக்கு வருந்துகின்றனர் என்று தெரிகிறது. (ஒ-கி.)

---

**மறைவு**

'நம் நாடு' அலுவலகத் தோழர் என். வி. மதிவண்ணன் அவர்களின் பெரிய தந்தையாரும் நீண்டகால இயக்கப் பணியாளருமான திருக்கோட்டியூர் திரு. மு. ரெங்கசாமி அவர்கள் 2—6—57ல் இயற்கை யெய்திவிட்டார் என்றசெய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது குடும்பத்தார்க்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். (ஆ-ர்.)

* * *

4—6—57 மாலை 5 மணிக்கு சிவகிரி கழகத் தோழர் எம்.கே. அங்கப்பன் அவர்கள் எதிர்பாராவிதமாக மாரடைப்பினால் இயற்கையெய்தியதற்கு வருந்துவதுடன் அவர்தம் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபத்தை சிவபுரி தி. மு. கழகம் தெரிவித்துகொள்கிறது.

# 'அநீதிக்கு எதிராகப் போராடவே வழக்கு மன்றம் செல்கிறோம்'

## 'நீதி பெற மக்கள் நிதி உதவி தருவது மிக அவசியமாகும்'

## சென்னைக் கூட்டத்தில் அண்ணா இலட்சியக் குரல்

சென்னை — வண்ணாரப்பேட்டைத் தொகுதித் தேர்தல் வழக்கு நிதிக்காக, கோகலே மண்டபத்தில் 15—6—57-ந் தேதியன்று அண்ணா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார்கள்.

அந்தக் கூட்டத்தில் பொதுவாக, கழகம் நீதி பெற வழக்கு மன்றங்களை நாடுவது குறித்தும், அதற்கான செலவுக்காக மக்கள் நிதி வழங்க வேண்டியதின் அவசியம் குறித்தும் தெரிவித்த கருத்துக்கள் இங்கு தரப்படுகின்றன :—

"வட சென்னைப் பகுதியில் போட்டியிட்ட நமது நண்பர் ஜீவரத்தினம் வெற்றி பெற முடியவில்லை என்பது நமக்கு பெருத்த நஷ்டமாகும். அதற்கான நல்ல சூழ்நிலைகள் இல்லையா என்றால், இருந்தது; வடசென்னைப் பகுதியிலுள்ள கிளைக் கழகங்கள் அடிப்படை வசதிகளோடு இயங்கிவருகின்றன; ஆனாலும், நண்பர் ஜீவரத்தினம் வெற்றி பெற முடியவில்லை என்றால் அது நமக்கு பெருத்த ஏமாற்றமும்—வெட்கப்படத்தக்கதுமாகும். 'நம்மை எதிர்த்தவர்கள் பண பலத்தைக் காட்டி வெற்றி பெற்றார்கள்; இத்தனை வசதிகளும் நம்மிடம் இல்லை என்பது ஆரம்பத்திலிருந்தே தெரியும்' என்று சொல்வதானால், சமாதானத்திற்குச் சொல்லலாமே தவிர வேறொன்றுமில்லை.

"நம்மிடம், எதிரியின் பண பலத்தையும் மிஞ்சக்கூடிய அளவுக்கு மக்கள் பலம் பெருக வேண்டும்.

"ஒரு கட்சியைப்போல நமக்கும் பணபலம் பெருக வேண்டும் என்று கருதுவது ஒரு கட்சி மற்றக் கட்சியோடு போட்டியிடுவதற்குத்தான் பயன்படுமே தவிர, அது சனநாயக வளர்ச்சிக்கு துணையாக அமையாது; சனநாயகம் வளர உதவி புரியாது. எனவே, நாம் தேர்தலில் பெரும்பாலான இடங்களில் வெற்றி பெற முடியாமற்போனதற்கு, 'பண பலமில்லை; அதனால் தோற்றுவிட்டோம்' என்பது சமாதானம் அல்ல; அப்படி நாம் சமாதானம் தேடிக்கொள்ளவும் இல்லை.

"நண்பர் செழியன் அவர்கள் தனது தலைமையுரையில் பேசும்போதுகூட உங்களிடையே குறிப்பிட்டார்—'நாம் பல விவகாரங்களுக்கு வழக்கு மன்றத்திற்குச் சென்றதில்லை'—என்று! ஆனால், சில இடங்களில் தேர்தலில் நமக்குக் கிடைத்த முடிவு நியாயமானதல்ல; தேர்தல் ஒழுங்கற்ற முறையில் நடைபெற்றது—சட்டத்திற்குப் புறம்பான முறையில் நடைபெற்றது என்று கருதுகிறோம். அந்த முறையில் நாம் நீதி கோரி சட்ட மன்றம் செல்கிறோம்.

"சட்டமன்றத்தில் அமரவேண்டும் என்று நான் விரும்பிய பல தோழர்களில் நண்பர் ஜீவரத்தினமும் ஒருவர். காரணம், நண்பர் ஜீவரத்தினம் பாட்டாளி சமுதாயத்திலேயே பிறந்தவர்; பாட்டாளி சமுதாயத்துடனே பழகிவருபவர்; நமது இயக்கத்தில் நெடுநாட்களாகப் பணியாற்றி வருபவர்; அப்படிப்பட்ட நண்பரை சில நாள் இழந்து நாம் மீண்டும் பெற்றோம்.

"சுயமரியாதை இயக்கம் நடைபெற்ற காலத்தில், நான் அதில் ஈடுபட்டு பணியாற்றிய நேரத்தில் அப்பொழுது நண்பர்கள் வாசுதேவன், தேவராசன், ஆல்பர்ட் ஜேசுதாசன், சங்கரன் போன்றவர்கள் துணையாக இருந்தார்கள். அப்பொழுதெல்லாம் நாங்கள், குளத்திலுள்ள அல்லி சூரியன் உதயமானவுடன் மலர்ந்து, சூரியன் மறையும் நேரத்தில் கருகிப் போவதைப்போல், பல திட்டங்களைப் போடுவோம்; திட்டங்களைப் போட்ட சில தினங்களுக்குள் அத்திட்டங்கள் தோல்வியை அடைந்துவிடும்—போட்ட திட்டங்கள் வெகு சீக்கிரத்தில் பட்டுப்போகும்; ஆனால் அதற்காக மனம் சலித்துப் போவதில்லை. அப்பொழுதெல்லாம் கூட தோழர் ஜீவரத்தினம் இருந்தார். நண்பர் வாசுதேவன் நல்ல உள்ளம் படைத்தவர்; இயக்க வளர்ச்சிக்கு ஏதாவது திட்டம் போட்டுக்கொண்டே இருப்பார். அப்பொழுது இத்தாலி நாட்டில் மாஸினி என்ற தலைவர் ஒரு கலர் சட்டை இயக்கம் நடத்தினார். அதாவது, உடல் முழுதும் பச்சைவர்ண ஆடைகளையே அணிந்துகொள்வது என்ற ஒரு இயக்கம் நடத்தினார். அதையறிந்த நண்பர் வாசுதேவன் என்னிடம் வந்து, நாமும் இப்படி ஒரு இயக்கம் நடத்தலாம் என்றார். அது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு 'பச்சை சட்டை இயக்கம்' ஆரம்பிக்கப்பட்டது. அதாவது, பச்சைக் கலரில் சட்டை தைத்து, மார்பில் வைக்கப்படும் இரண்டு பைகளையும் மஞ்சள் கலர் துணியால் தைத்துக்கொள்வது. அதற்கு, நம்முடைய இருதயம் மஞ்சள் நிறத்தைப் போன்று தூய்மையாக இருக்கவேண்டும்—நாம் மேற்கொள்ளும் செயல்கள பச்சையாகவே இருக்கவேண்டும் என்று விளக்கம் கூறுவது. ஆனால், நண்பர் தேர்ந்தெடுத்த வண்ணம் பச்சையானதால், அதைத் தைத்துப்போட்ட பத்து நாளைக்கெல்லாம் வெளுக்க ஆரம்பித்துவிட்டது. இதைப் பார்த்த பிறகு, அவ்வியக்கம் கைவிடப்பட்டது. அப்பொழுது பச்சை சட்டை போட்டுக் கொண்டு இருந்தவர்களில் நண்பர் ஜீவரத்தினமும் ஒருவர். அதுமட்டுமல்ல; அந்நாளிலிருந்தே பாட்டாளிகள் சமூகத்திற்காக ஏதாவது பணிசெய்து கொண்டேயிருப்பவர். அப்படிப்பட்ட நண்பர் சட்டசபைக்கு வந்திருந்தால் இன்னும் பல பணிகளை செய்திருக்கமுடியும். அவர் சட்டசபைக்கு வரமுடியாமற் போனது நமக்கெல்லாம் பெருத்த நஷ்டமாகும்.

"நாம் யாரும் வசதி படைத்தவர்கள் அல்ல; நம்மிடையே வசதி படைத்தவர்கள் யாரும் இல்லை. வசதி படைத்தவர்கள் இல்லையென்பதை என் நான் மகிழ்ச்சியோடு கூறுகிறேனென்றால், பொதுவாகவே வசதி படைத்தவர்களிடம் வசதியற்றவர்கள் சற்று தாழ்ந்தே செல்லவேண்டியிருக்கும். இதை அகில உலகெங்கும் காண்கிறோம். ஆனால் நல்லவேளையாக நம்மிடையே யாரிடத்திலும் வசதியில்லை. எனவே, இம்மாதிரியான மன்றங்களில் கட்டணம்போட்டு வழக்கு நிதியென கேட்கிறோம். இன்று வசூலான தொகை மட்டும் போதுமா என்றால், போதாது; இன்னும் தேவைப்படும். இப்பொழுது நீங்கள் கொடுத்துள்ள தொகை வழக்கின் ஆரம்பச் செலவுக்குத்தான் போதும். ஆனால் இந்தத் தொகையை நீங்கள் அளித்துள்ளதைக் காணும்போது, வழக்கிற்குப் பின்னால் ஏற்படவிருக்கும் செலவுகளையும் நீங்கள் தருவீர்கள் என்றே நம்புகிறேன். எனவே நீங்களும் இந்தக் கூட்டத்திற்குப் பிறகும் அவ்வப்பொழுது நாங்கள் கேட்கும்பொழுது நிதி உதவியை அளிக்குமாறு பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். நான் ஏன் உங்களிடம் இவ்வளவு அழுத்தமாக நிதி உதவியைப்பற்றியே பேசுகிறேனென்றால், இன்றைய சூழ்நிலையில், சட்டத்தை பணவசதியுள்ளவர்களால மட்டும்தான் நெருங்க முடிகிறது.

"காலஞ்சென்ற 'கல்கி' அவர்கள் இந்தச் சட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில், 'சட்டம் ஓர் கழுதை' என்றார்.

"ஏன் அவ்வாறு கழுதைக்கு உபமானம் கொடுத்தார் என்றால், பொதுவாகவே கழுதைக்குப் பின்னால் சென்றால் பின்னால் வருபவர்களை அது உதைக்கும்; ஆனால், அதை முன்னால் சென்று அதன் காதைப் பிடித்துவிட்டால் அது அடங்கிவிடும். அதைப் போன்று, சட்டம், அதன் பின்னால் பயந்து பயந்து செல்லும் ஏழைகளை உதைக்கிறது; ஆனால் அதையே துணிந்து ஒரு பணக்காரன் முன்னால் சென்று அதைப் பிடித்துவிட்டால்—அதாவது, துணிந்து சட்டத்தை மீறினால் அவனை அச்சட்டம் ஒன்றும் செய்வதில்லை; இந்த இரண்டு அரிய கருத்துக்களையும் வைத்துத்தான் காலஞ்சென்ற 'கல்கி' அவர்கள் சட்டத்தை ஓர் கழுதை என்றார்.

"எனவே, நாம்வழக்கு மன்றம் செல்ல வேண்டுமென்றால் நமக்குப் பணம் தேவைப்படுகிறது. வழக்கிற்காக நாம் எடுத்துக்கொள்ளக்கூடியமுயற்சிகளில் நமக்கு குந்தகம் ஒன்றும் ஏற்படக்கூடாது. அவ்வாறு நம்முடைய முயற்சிகள் குந்தகம் ஏதுமின்றி நடைபெற போதிய பண வசதியில்லாமல் முடியாது; எனவே, அதற்கான பொருள் உதவியை அவ்வப்போது தருவதற்கு நீங்கள் உறுதியெடுத்துக்கொள்ள வேண்டும் என்று நான் உங்களை பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

"துவக்க நாளில் நாம் வழக்கு மன்றத்திற்குச் செல்வதற்குப் போதிய அவசியமிருந்தது; ஆனால் அப்பொழுதுகூட நான், வழக்கு மன்றம் செல்வதை விரும்பவில்லை. உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன்; சேலத்தில் சுயமரியாதை இயக்கத்துக்குச் சொந்தமான கட்டடம் ஒன்று இருக்கிறது. ஆரம்பத்தில் அக்கட்டடத்தை உருவாக்கியதில் எனக்கும் நண்பர்களுக்கும் பெரும் பங்கு உண்டு. கழகம் பிரிந்தபோது அந்தக் கட்டடத்தில் பங்குபெற்றபலர் என்னிடம்வந்து, வழக்கு போடலாமென்று யோசனை கூறினார்கள். பெரியாரின்மேல் கோபமுள்ள ஒருசில வழக்கறிஞர்கள்கூட என்னிடம் வந்து 'வழக்கு போடுங்கள்; நமக்கு நிச்சயம் வெற்றி உண்டு; போதிய ஆதாரமிருக்கிறது' என்று கூறினார்கள். நான் அப்பொழுதே மறுத்துவிட்டேன். நான் அவர்களுக்குக் கூறிய பதில், 'இந்தக் கட்டடத்திற்கு வழக்கு போட்டு, அதற்காகக் காலத்தையும்—உழைப்பையும் — பணத்தையும் செலவழிப்பதற்குப் பதிலாக, வேறு வகையில் செலவழித்தால் இதைப்போன்ற நான்கு கட்டடங்கள் என்னால் கட்டமுடியும்' என்றேன்.

"ஆகவே, நாம் எப்பொழுதும் வழக்கு மன்றம் செல்லவிரும்பியதில்லை. ஆனால் இப்பொழுது வழக்கு மன்றத்திற்கு நாம் செல்வது, நியாயத்தை நிலைநாட்டுவதற்காகச் செல்லுகிறோம்; நமக்கு இழைக்கப்பட்ட அநீதியை எடுத்துக் காட்டுவதற்காகச் செல்லுகிறோம். வழக்கு மன்றத்தில் நமக்கு நீதி கிடைக்குமா கிடைக்காதா என்பது ஒருபுறமிருந்தாலும், நாம் ஈடுபட்டிருக்கும் பொறுப்பு மகத்தானது என்பதை உணர வேண்டும்; அந்தப் பொறுப்பை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும். பின்பு நமக்கு வெற்றியா தோல்வியா என்பதைப் பற்றிக் கவலையில்லை."

---

அற்ப காரணங்களுக்காக

## 331 தடவைகள் இரயில் நிறுத்தமாம்!

மக்கள் சபை உறுப்பினரின் முறைதவறிய செயல்

புதுடில்லி, ஜுன் 17—

கிழக்கிந்திய இரயில்வேயில் சென்ற மே 20-ந் தேதியோடு முடிவடைந்த 10 நாட்களில் அற்ப காரணங்களுக்காக 331 முறை 'அபாயச் சங்கிலி'யை இழுத்து இரயில்கள் நிறுத்தப்பட்டனவாம்.

இரயிலில் பிரயாணம் செய்த ஒரு பாராளுமன்ற உறுப்பினர், வண்டி புறப்படுகையில் தன்னுடன் எடுத்துச் செல்ல வேண்டிய சாமான்கள் இரயில் நிலையத்திற்கு வந்து சேராததால் இருதடவைகள் அபாயச் சங்கிலியை இழுத்து இரயிலைத் தாமதப்படுத்தனாராம்! அந்த இரயில் புறப்படுவது இதனால் தாமதமாகியதுடன், மற்றொரு இரயிலையும் நிறுத்திவைக்க வேண்டியதாயிற்றாம்!

---

சாரதா சட்டத்தின் கீழ்

## 21 பேர் கைது!

ஆமதாபாத், ஜுன் 14—

12 மாதங்களே நிரம்பப்பெற்ற குழந்தைக்குத் திருமணமாம்!

மற்றும், 12 வயது நிரம்பாத பலருக்கும் திருமண ஏற்பாடாம்!

விராகம் என்ற பகுதியில் உள்ள குக்ராஜ கிராமத்தில் இந்த மண விழா ஏற்பாடு செய்யப்பட்டதாம்!

செய்தி கிடைத்ததும் போலீசார் விரைந்து சென்று சாரதா சட்டத்தின்கீழ் பருவ வயதை அடையாத இந்த 21 மணப் பெண்களையும் கைது செய்து வழக்குத் தொடர்ந்துள்ளனராம்.

---

## ரூ. 58 இலட்சம் செலவில் கவர்னருக்கு மாளிகை!

ரூ. 58 இலட்சம் செலவில் பஞ்சாப் கவர்னருக்கு ஒரு மாளிகை கட்டுவதற்கான திட்டம் தற்போது கைவிடப்பட்டுள்ளதாம்.

நாட்டில் தேவையான அளவிற்கு சிமெண்டும், உருக்கும் கிடைக்கவில்லையாம். மேலும் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டுமென்பதற்காக பஞ்சாப் மாநில அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாம்.

---

## மின்சார ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தம்?

கோவை, ஜுன் 14—

சென்னை மின்சார இலாகா 'சபார்டினேட்' ஊழியர்கள் சுமார் 3,900 பேர் ஜுன் 27-ந் தேதியன்று அடையாள வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்துள்ளனர். ஜுன் 26 முதல் 'பாட்ஜுகள்' அணிந்து வேலை செய்வர்.

இலவச வீட்டு வசதி, இலவச ஒளி வசதி, நாள் 'படி' ரூ. 2, குறைந்தபட்ச ஊதியம் ரூ. 25 ஆக நிர்ணயித்தல் போன்ற கோரிக்கைகளே இந்த அடையாள வேலை நிறுத்தத்திற்குக் காரணம்.

---

ஆரம்ப ஆசிரியர்களிடம்

## அக்கறை பிறக்கிறது!

சென்னை, ஜுன் 17—

ஆரம்ப ஆசிரியர்களின் கிராக்கிப்படியை உயர்த்த சென்னை அரசாங்கத்திற்கு அக்கறைபிறந்துவிட்டது.

சென்ற அக்டோபரில் அரசாங்கம் அனுமதித்த விசேட உபரி சம்பளம் பெற்ற ஆசிரியர்கள் அனைவருக்கும் இந்தப் புதிய கிராக்கிப்படி உயர்வு உண்டு.

ரூ. 20-க்கு அதிகமாக ஊதியம் பெறாத ஆசிரியர்களுக்கு ரூ. 23 கிராக்கிப்படியும், ரூ. 20 முதல் ரூ. 40-க்குள் பெறுபவர்களுக்கு ரூ. 23 கிராக்கிப்படியும், ரூ. 40 முதல் ரூ. 60 வரை பெறுபவர்களுக்கு ரூ. 29 கிராக்கிப்படியும், ரூ. 60 முதல் ரூ. 100 வரை பெறுபவர்களுக்கு ரூ. 31 கிராக்கிப்படியும் தரப்படும்.

இந்தக் கிராக்கிப்படி உயர்வினால் ஏற்படும் அதிகச் செலவை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளுமாம்.

---

## குடும்பக் கட்டுப்பாடு பயிற்சிப் பள்ளி

சென்னை, ஜுன் 17—

இந்தியாவில் முதல் முறையாக சென்னையில் குடும்பக் கட்டுப்பாடு பயிற்சிப் பள்ளி ஆரம்பிக்க மத்திய அரசாங்கம் முடிவுசெய்துள்ளது.

அடுத்தத் திங்களில் இந்தப் பள்ளி ஆரம்பிக்கப்படுமாம்.

பெண்களே அதிகமாக இங்கு பயிற்சி பெறுவார்களாம். ஆரம்பத்தில் 25 பேர்களுக்கு பயிற்சியளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

---

## வாழ விரும்பிய 1,600

ஆப்பிக்கருக்கு நேர்ந்த கொடுமை

ஜோகன்ஸ்பர்க், ஜுன் 17—

வாழ வழிதேடி, டர்பன் சென்றனராம் 1,600 ஆப்பிரிக்கர்கள்! அநுமதியின்றி அவர்கள் அங்கு வேலை தேடினராம்—இது குற்றமாய்! டர்பன் போலீசார் ஆப்பிரிக்கர்களுக்கான முனிசிபல் முகாமை சோதனையிட்டபோது இந்த 1,600 பேரைக் கைது செய்துள்ளனராம்!

---

## கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கப் பொதுக்கூட்டம்

அண்ணா கலந்துகொள்வார்

19—6—57 மாலை 6 மணிக்கு, தமிழ் நாடு கிராம உத்தியோகஸ்தர்கள் சங்க மதுராந்தகம் தாலுக்கா கிளையின் பொதுக் கூட்டம், தாலுக்கா காரியாலயத்தின் திடலில், திரு. வி. எ. எத்திராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; அக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேசுவார்.

---

சென்னை-தொண்டையார்பேட்டை தி.மு.க. உறுப்பினர்களுக்கு

19—6—57 இரவு $7\frac{1}{2}$ மணி அளவில், (217, திருவொற்றியூர் நெடுஞ்சாலை) கழகக் கட்டிடத்தில், செயலாளர் - துணைச் செயலாளர் தேர்தல், சென்னை மாவட்ட துணைச் செயலாளர் தோழர் கோ. செங்குட்டுவன் தலைமையில் நடைபெறும்.

---

## சத்தியவாணிமுத்து

எம்.எல்.ஏ., சுற்றுப்பயணம்

ஜுன் 18 : வேடசந்தூர்
19 : மலம்பட்டி
20 : பூங்குடி
21 : திருப்பரங்குன்றம்
22 : குரும்பம்பட்டி
23 : சேலம்

---

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா நெடுஞ்செழியன் எம்.ஏ